--

# دار العلوم الأثرية

## தாருல் உலூம் அல் அதரி

இஸ்லாமிய ஷரீஅத் கல்விக்கான நிகழ்நிலை கல்விச்சாலை

வயது ஒரு தடையல்ல... ஷரீஅத் கல்வி கற்க...

## விவரக்குறிப்பேடு
## 1447 ஹிஜ்ரி / 2026


உரிம எண் : TN02D0098668

கைபேசி : 0091-89039 25087

மின்னஞ்சல் : ilm.alathari@gmail.com

அலுவலகம் : அய்யம்பேட்டை, தஞ்சாவூர் (மா), தமிழ்நாடு

பதிவு அலுவலகம் : 12வது மெயின் ரோடு, 2 வது குறுக்கு சாலை, பெரியார் நகர், சென்னை 82. தமிழ்நாடு

# விவரக் குறிப்பேடு

## அறிமுகம்

தாருல் உலூம் அல் அதரி (சுருக்கமாக “அல் அதரி”) என்ற நிகழ்நிலை (Online) இஸ்லாமிய கல்விச்சாலை, இளம் வயதில் இஸ்லாமியக் கல்வியைத் தவறவிட்டு, அதனை மீண்டும் பெற ஏங்குபவர்களுக்கான ஒரு முழுமையான ஆலிம் கல்வியை வழங்கி வருகிறது.

## நோக்கம்

அல் அதரி, ஷரீஅத் கல்வியின் அனைத்து துறைகளிலும் கல்வி பயின்ற தரமான ஆலிம்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு, நிகழ்நிலை (Online) வாயிலாக இக்கல்வியை வழங்கி வருகிறது. இஸ்லாமிய சமூகத்தின் எந்த பகுதிகளில் இருந்தாலும், ஷரீஅத் கல்வியைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்துடனும் திறந்த மனதுடன் இருக்கும் அனைத்து மாணவர்களையும் அல் அதரி வரவேற்கிறது.

## திட்டம்

அல் அதரியின் பாடத்திட்டம், ஆசிய நாடுகளில் உள்ள பாரம்பரிய மதரஸாக்களிலும், அரபு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் பயிற்றுவிக்கப்படும் அனைத்துத் துறைகளின் (ஃபன்) பாடங்களை, குடும்ப-சமூக பொறுப்புகளுக்கு மத்தியில் மார்க்கக் கல்வியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள பெரியவர்களும், இலகுவாகக் கற்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அல் அதரி, இந்த ஐந்து ஆண்டு ஆலிம் கல்வியை பின்வரும் வடிவமைக்கப்பட்ட படிநிலைகளில் பயிற்றுவிக்கிறது:

- முதல் கட்டமாக, ஷரீஅத் கல்வியின் மிக முதன்மை அடிப்படையான அரபு மொழியை பயில்விக்கிறது. அரபு மொழியின் முக்கியத்துவம் காரணமாக தொடக்க நிலை, இடை நிலை, உயர் நிலை என பல நிலைகளில் லுகா, இன்ஷா, பலாகா (அரபி மொழி இலக்கண-இலக்கியம்) சார்ந்த 6 பாடங்களை உள்ளடக்கியுள்ளது.
- இரண்டாம் கட்டமாக, எளிமையான தொடக்க நிலை ஃபிக்ஹ் (சட்டம்) பாடங்களையும், குர்ஆன்-ஹதீஸ்-ஃபிக்ஹ் பாடங்களை அணுகத் தேவையான உஸூல்களை (அடிப்படைகள்) பயிற்றுவிக்கிறது.
- மொழி, உஸூல் மற்றும் ஃபிக்ஹ் ஆகியவற்றின் ஆழமான அறிவின் துணையோடு, அடுத்த கட்டமாக,
  - ✓ தஃப்சீர் (அல்குர்ஆன் விளக்கவுரை - ஐந்து விதமான தஃப்சீர்கள்)
  - ✓ ஹதீஸ் அதன் ஷரஹ்களுடன், ஹதீஸ் ஆய்வு பற்றிய பாடங்கள் & பயிற்சிகள்
  - ✓ ஃபிக்ஹுல் முகாரின் (நான்கு மத்ஹப்களின் ஒப்பாய்வு)
  - ✓ அகீதா
  - ✓ அக்ஹ்லாக் – ஆதாப் (ஒழுக்கம்)
  - ✓ சீறா / தாரீக்ஹ் (வரலாறு)
  - .
  - ✓ மன்திக் (தர்கக் கலை)
  - ✓ ஃபலக் (வானவியல்)
  - ✓ பராஇழ் / மீறாத் (சொத்துப்பங்கீடு
  - ✓ தஃவா

  ஆகிய பாடங்களைப் பயிற்றுவிக்கிறது.
- இதன் இறுதி கட்டமாக, இந்திய அரசியலமைப்பு சட்டம், IPC மற்றும் CRPC ஆகியவற்றயை பற்றிய அறிமுகப் பாடத்தையும் பயிற்றுவிக்கிறது.

SIGN HERE

## பாட விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **ஆலிம் கல்வி ("மௌலவி. அல் அதரி" / "மௌலவிய்யா. அல் அதரிய்யா"** என சான்றளிக்கப்படும்) |
| காலம் | : | **5 ஆண்டுகள்** |
| கல்வியாண்டு சுழற்சி | : | **இஸ்லாமிய ஆண்டு (ஷவ்வால் - ஷஅபான்)** |
| பயிற்றுவிக்கும் மொழி | : | **தமிழ்** |
| கட்டணம் | : | **₹ 5,000/- ஆண்டு ஒன்றிற்கு (இந்திய ரூபாய் ஐயாயிரம்)** |
| கற்பிக்கும் முறைமை | : | **பிற்சேர்க்கை #1** |
| மதிப்பீடு முறைமை | : | **பிற்சேர்க்கை #2** |
| பொதுவான கேள்விகள் / ஐயங்கள் (FAQs) | : | **பிற்சேர்க்கை #3** |

SIGN HERE

பிற்சேர்க்கை #1

# கற்பிக்கும் முறைமை

அல் அதரி, பெரியவர்களுக்குக் கல்வி கற்க இருக்கும் தடைகளான வயது வரம்பு, வசிப்பிட மற்றும் பணியிடச்சூழல், வேலையின் இயல்பு, குடும்ப மற்றும் சமூகக் கடமைகள் மற்றும் இன்ன பிற காரணிகளைக் கருத்தில் கொண்டும், அதே நேரத்தில் கல்வி அறிவைத் தேடக்கூடியவர்களுக்கு இலகுவாக இருக்கும் வண்ணம், நிகழ்நிலை முறை (Online) மற்றும் நிழல்நிலை முறை (Offline) என இரண்டு முறைமைகளில், இந்த ஆலிம் கல்வியை வழங்கி வருகிறது.

**பதிவு செய்யப்பட்ட வகுப்பு**

- வாரந்தோறும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடத்திற்கான வகுப்புகளின் இணைப்புகளை Mobile applications வழியாக மாணவர்களுக்கு அனுப்பப்படும்.
- மாணவர்கள் வகுப்பு பதிவுகளைப் பதிவிறக்கம் செய்து, அதைக் கேட்டு, குறிப்புகள் எடுக்க வேண்டும்.
- மாணவர்கள் பாடத்தைப் புரிந்து கொண்டார்கள் என்பதை உறுதிசெய்யும் பொருட்டு, ஆசிரியர் குறிப்பிடும் காலத்தவணைக்குள், எடுத்த குறிப்புகளை தவறாமல் Scan செய்து அனுப்ப வேண்டும்.

**நேரலை வகுப்பு**

- மாணவர்கள் படித்ததை மீட்டிப் பார்க்கும் வண்ணம், சீரான கால இடைவெளியில் தொடர் நேரடி வகுப்புகள் நடத்தப்படும்.

## பாட செயற்பாடுகள்

மாணவர்களை ஆழமான ஷரீஅத் கல்வியறிவைப் பெற்றவர்களாக உருவாக்கும் பொருட்டு, அவர்களைப் பல்வேறு பாட செயற்பாடுகளைக் கொண்டு அல் அதரி பயில்விக்கிறது.

- பாட செயற்பாடுகள் என்பது வீட்டுப்பாடம் (பாடக்குறிப்புகள் + பயிற்சிகள்), வகுப்பீடு ஆகியவற்றைக் குறிக்கும்.
- மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் பாட செயற்பாடுகளும் அதை சமர்ப்பிக்க வேண்டிய நாளும் ஆசிரியரால் குறிப்பிடப்படும். கொடுக்கப்பட்ட பாட செயற்பாடுகளை சமர்ப்பிக்க வேண்டிய நாளிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ தவறாமல் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பாட செயற்பாடுகளுக்கும் மதிப்பெண்கள் உண்டு.
- தொடர்ச்சியாக ஐந்து பாட செயற்பாடுகளை சமர்ப்பிக்காத மாணவர், மதரசாவின் ஆலிம் கல்வியிலிருந்து விடுவிக்கப்படுவார்.

## வருகைப்பதிவேடு முறைமை

- வருகைப் பதிவேடு பாட வாரியாக, நேரலை வகுப்பிற்கு மாணவரின் வருகையை வைத்தும், பதிவு செய்யப்பட வகுப்பிற்கு பாடத்தைக் கேட்டு மாணவர்கள் அனுப்பும் குறிப்பை வைத்தும் பதிவு செய்யப்படும்.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதித் தேர்வில் கலந்து கொள்ள, மாணவர் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 80% தனது வருகைப் பதிவு பெற்றிருக்க வேண்டும்.
- 80%க்கும் சற்றுக் குறைவான வருகைப் பதிவு இருக்கும் மாணவருக்கு, அந்தப் பாடத்தின் இறுதித் தேர்வில் கலந்து கொள்ளும் தகுதி பெற, கூடுதலான பயிற்சிப்பாடங்கள் வழங்கப்படும்.

SIGN HERE

பிற்சேர்க்கை #2

## மதிப்பீடு முறைமை

ஒவ்வொரு பாடத்தின் மதிப்பீடு என்பது உள்மதிப்பீட்டு மதிப்பெண் மற்றும் இறுதித் தேர்வு மதிப்பெண் என இரு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் இவ்விரு முறைமைகளிலிலும் பெறும் மதிப்பெண்களில், ஒவ்வொரு முறைமைகளிலிருந்தும் 50% இறுதி மதிப்பெண்ணாக எடுத்துக்கொள்ளப்படும்.

**மதிப்பீடு முறைமை**

| **உள் மதிப்பீடு** | **இறுதி தேர்வு** |
|---|---|
| குறைந்தபட்ச தேர்ச்சி : 60/100 | குறைந்தபட்ச தேர்ச்சி : 40/100 |
| (50% எடுத்துக்கொள்ளப்படும்) | (50% எடுத்துக்கொள்ளப்படும்) |

**பகுதி அ: உள் மதிப்பீடு**

உள்மதிப்பீடு என்பது பாட செயற்பாடுகள் மற்றும் சுழற்சித் தேர்வுகளின் அடிப்படையில் என ஒவ்வொரு பாடத்திற்கும் வழங்கப்படும்.

**பாட செயற்பாடுகள்**

- ஒவ்வொரு பாட செயற்பாடுகளுக்கும், குறித்த நேரத்தில் சமர்ப்பித்தல் என்ற அடிப்படையில் கணக்கிடப்படும். மாணவர்களுக்கான மதிப்பெண் கணக்கீடு கீழ்காணும் முறையில் வழங்கப்படும்:

| நிலை | நேர அடிப்படை |
|---|---|
| குறித்த நேரத்தில் சமர்ப்பித்தல் | 100% |
| சலுகை காலத்தில் சமர்ப்பித்தல் | 75% |
| சலுகை காலதிற்கு பிறகு சமர்ப்பித்தல் | 50% |
| சமர்ப்பிக்காமை | - |

**சுழற்சித் தேர்வுகள்:**

- இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, முதல் வெள்ளிக்கிழமை / ஞாயிற்றுக்கிழமை அன்று சுழற்சித் தேர்வுகள் நடத்தப்படும்.
- சுழற்சி தேர்வுகளில் பெறும் மதிப்பெண்கள் உள் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கருதப்படும்.

**மொத்த உள்மதிப்பீட்டின் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் 100 க்கு 60 ஆகும்.**

**பகுதி ஆ: இறுதித் தேர்வு**

- ஒவ்வொரு பாடத்திற்கான இறுதித் தேர்வு, அந்த பாடத்தின் முடிவின் பொழுதோ அல்லது ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியான ஷஅபான் மாதத்திலோ நடைபெறும்.
- உள்மதிப்பீட்டில் குறைந்தது 60 சதவீதமும் வருகை பதிவேட்டில் குறைந்தது 80 சதவீதமும் பெறும் மாணவர்கள் மட்டுமே அந்தப் பாடத்தின் இறுதித் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.
- இறுதித் தேர்வு மாணவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள ஏதேனும் ஒரு மதரசாவில், ஓர் ஆலிமின் மேற்பார்வையில் நடைபெறும்.

**இறுதித் தேர்வின் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் 100 க்கு 40 ஆகும்.**

SIGN HERE

பிற்சேர்க்கை #3

## பொதுவான கேள்விகள்/ஐயங்கள் (FAQs)

**1) தாருல் உலூம் அல் அதரி என்பது மதரசாவா? வாட்ஸப்/டெலிகிராம் குரூப்-ஆ? யூடியூப் சேனல்-ஆ?**

இது பதிவு செய்யப்பட்ட ஒரு மதரசா. இதன் பாடத்திட்டம் ஆசிய நாடுகளில் உள்ள பாரம்பரிய மதரஸாக்களிலும், அரபு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் பயிற்றுவிக்கப்படும் அனைத்துத் துறைகளின் (ஃபன்) பாடங்களை, குடும்ப-சமூக பொறுப்புகளுக்கு மத்தியில் மார்க்கக் கல்வியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள பெரியவர்களும், இலகுவாகக் கற்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**2) இந்தக் கல்வியில் இணைய உலகக்கல்வி தகுதி ஏதேனும் பெற்றிருப்பது அவசியமா?**

இல்லை. அவ்வாறு எவ்வித கட்டாயமும் இல்லை. குர்ஆன் ஓதவும், தமிழ் எழுத படிக்கத்தெரிந்தாலும் போதுமானது.

**3) குர்ஆன் சரளமாக ஓதுவதில் சிரமம் உள்ளவர்கள் இதில் இணைய முடியுமா?**

ஆம் இணையலாம். என்றாலும் அதை விரைவாக சரி செய்துகொள்ள வேண்டும். தங்கள் அருகாமையில் உள்ள மதரஸாவிலோ அல்லது உஸ்தாதுகள் இடத்திலோ கற்று, பயிற்சியெடுத்து சரி செய்வதன் மூலம், எவ்வித தடையோ தொய்வோ இல்லாமல் சீராக நமது கல்வியைக் கற்கலாம்.

**4) இந்தக் கல்வியில் இணைய இதர தகுதிகள் ஏதேனும் உள்ளதா?**

இந்தக் கல்வியை பள்ளிக்கூடங்களில் / கல்லூரியில் படிப்பவர்களுக்கும், உலகக் கல்வியில் கூடுதல் முன்னுரிமைக் கொடுப்பவர்களுக்கும் நாம் பரிந்துரைப்பதில்லை. அவர்களால் ஒரே நேரத்தில் இரண்டு கல்வியையும் (Dual Degree) கையாள்வதில் சிரமம் இருக்கும்.

**5) ஆலிமா கல்விக்கும் மௌலவிய்யா கல்விக்கும் என்ன வேறுபாடு?**

ஆலிமா கல்வி என்பது பொதுவாக 3 ஆண்டுகள் வழங்கப்படும். பொதுவாக ஆண்கள் 5/7 ஆண்டுகள் பயிலும் ஆலிம் கல்வியை, எவ்வித பாகுபாடும் இன்றி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே விதமாக ஆன்லைன் வாயிலாக 5 ஆண்டுகளில், மௌலவிய்யா கல்வியாக நாம் வழங்குகிறோம்.

**6) வாட்ஸப் / டெலிகிராம் / ஜிமெயில் போன்றவை கட்டாயம் தேவையா?**

மதரசாவின் அறிவிப்புகள் / பாடங்கள் போன்றவை வாட்ஸப் மற்றும் டெலிகிராம் தளங்களின் வழியாக அனுப்படும். எனவே வாட்ஸப் மற்றும் டெலிகிராம் ஒரே எண்ணில் இருக்க வேண்டும். மேலும் பாடங்களை வீடியோ வடிவில் காண ஜிமெயில் உடைய அவசியமாகும்.

**7) மதரஸாவின் பாடங்கள் அறிவிப்புகள் வழங்கப்படும் டெலிகிராம் / வாட்சப் தளங்களில் ஆண்கள் பெண்கள் என கலந்து இணைக்கப்படுமா?**

இல்லை. ஆண்களுக்கு தனியாகவும் பெண்களுக்கு தனியாகவும் அவரவர்களுக்கு என்று உள்ள தளங்களில் இணைக்கப்படுவீர்கள்.

SIGN HERE

பிற்சேர்க்கை #3

## பொதுவான கேள்விகள்/ஐயங்கள் (FAQs)

**8) வாராந்திர வகுப்புகள் ஆன்லைன் நேரலையாக (Live) நடக்குமா ? அதன் பதிவுகள் (Recordings) எப்போதும் பார்க்கும் அமைப்பில் இருக்குமா?**

பாடங்கள் பதிவு (Recordings) செய்யப்பட்டு வாரந்தோறும் மதரசாவின் Mobile App வழியாக மாணவர்களுக்கு அனுப்பப்படும். மாணவர்கள் மீண்டும் கேட்டு மீட்டிக்கொள்ளும் வகையில், பாடத்திற்கான Video link, Audio மற்றும் புத்தகங்கள் எப்பொழுதும் அதிலேயே இருக்கும். மாணவர்கள் அதை அந்தந்த வாரத்திலேயே கேட்டு, குறிப்பெடுத்து சமர்ப்பிக்க வேண்டும். மதரசா குறிப்பிடும் நேரத்திற்குள் சமர்ப்பிப்பவர்களுக்கு அதனடிப்படையில் மதிப்பெண்களும் கணக்கிடப்படும்.

**9) இந்த கல்வி தமிழ் அல்லாத வேறு மொழிகளில் வழங்கப்படுமா?**

கல்விச்சாலையின் பாடங்கள் தற்போது தமிழ் மொழியில் மட்டுமே வழங்கப்படுகிறது. என்றாலும் மாணவர்கள் தங்களது பாடக்குறிப்புகளை தேர்வுகளை ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளிலும் எழுதலாம் . நம்மிடம் இதுவரை உருது, மலையாளம் ஆகியவற்றைத் தாய்மொழியாக கொண்ட மாணவர்களும் பயின்று வருகிறார்கள்.

**10) பாடப் புத்தகங்கள் வழங்கப்படுமா?**

புத்தகங்கள் PDF file களாக வழங்கப்படும். மாணவர்கள் அதை Print எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த புத்தங்களை மற்ற குழுக்களிலோ, வேறு யாருக்கும் அனுப்பக்கூடாது. இவை தாருல் உலூம் அல் அதரியில் பயிலும் மாணவர்களின் கல்விப் பயன்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

**11) பாடக் குறிப்புகள் வழங்கப்படுமா?**

வாராந்திர பாடங்களை மாணவர்கள் கேட்டு, அவர்களின் புரிதல்களை எழுதி மதரசாவிற்கு அனுப்ப வேண்டும். மதரஸாவின் சார்பாக குறிப்புகள் என தனியாக வழங்கப்படாது.

**12) தமிழ் எழுதுவதில் சிரமத்தை சந்திப்பவர்கள் HOMEWORK ஒவ்வொரு வாரமும் எழுத்து வடிவத்தில் சமர்ப்பிப்பதை தவிர்த்து வாய்வழியாக சமர்ப்பிக்கலாமா?**

வாராந்திர பாடக்குறிப்புகளை எழுத்து வடிவத்தில் சமர்ப்பிப்பது கட்டாயம். இது கற்கும் கல்வியை மனதில் பதிய வைக்க பயனுள்ளதாக இருக்கும். தமிழில் எழுதுவதில் சிரமம் இருக்கும் பட்சத்தில் ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கலாம்.

**13) வாராந்திர வீட்டுப்பாடங்களை Homework எவ்வாறு அனுப்ப வேண்டும்?**

பாடங்களுக்கு ஏற்ப தனித்தனியாக அதற்கென ஒரு Note போட்டு, வாராந்திர பாடக்குறிப்புகளை, வீட்டுப்பாடங்களை குறிப்பெடுத்து, Mobile வழியாக Scan செய்து, மதரசாவிற்கு என்று இருக்கும் DuA Mobile App ல் அனுப்ப வேண்டும். எவ்வாறு Scan செய்ய வேண்டும், எவ்வாறு அனுப்ப வேண்டும் போன்ற முறைமைகள் மாணவர்களுக்கு சொல்லித்தரப்படும்.

**14) மதரஸாவின் DuA Mobile App, Play Store / App Store களில் கிடைக்குமா?**

DuA Mobile App க்கான Link நாம் அனுப்பி வைப்போம். மேலும் அது தற்போது Android களில் மட்டுமே வேலை செய்யும். IPhone களில் வேலை செய்யாது. வீட்டில் வேறு ஏதேனும் Android mobile இருந்தால் அதை பயன்படுத்தலாம்.

பிற்சேர்க்கை #3

## பொதுவான கேள்விகள்/ஐயங்கள் (FAQs)

**15) உஸ்தாதுகளில் பெண்களும் இருக்கிறார்களா?**

தற்போது ஆண் உஸ்தாதுகள் மட்டும் உள்ளனர்.

**16) இந்த மதரஸாவில் எந்த மன்ஹஜ்ஜை (கொள்கை) சார்ந்த உஸ்தாதுகள் உள்ளனர்?**

ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் பெற்ற உஸ்தாதுகளைக் கொண்டு பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகிறது. முறைமைபடுத்தப்பட்ட தரமான கல்வியை பயிற்றுவிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்குடன், பல மன்ஹஜ்ஜை சேர்ந்தவர்கள் இணைந்து உஸ்தாதுகளாக சேவை செய்கிறார்கள்.

**17) மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடக்கும் சுழற்சித் தேர்வை நேரடியாக சென்று எழுத வேண்டுமா?**

இல்லை. அல்லாஹ்வை பயந்த நிலையில், அதை தங்களது வீட்டில் இருந்த படியே எழுதலாம்.

**18) ஆண்டு இறுதியில் எழுதும் தேர்வுகளுக்கு தேர்வு மையங்கள் (Exam Centre) எங்கு அமைக்கப்படும்?**

மாணவர்களின் எங்கு வசிக்கிறார்களோ அதற்கு அருகாமையில் இருக்கும் மதரஸாவிலோ / கல்விச்சாலையிலோ / பள்ளிவாசலிலோ அமைக்கப்படும்.

**19) பெண்கள் ஆன்லைன் தேர்வுகளுக்கு / கலந்தாய்வு ஆகியவற்றிக்கு Video call ல் வரவேண்டுமா?**

ஆன்லைன் தேர்வுகளுக்கு / கலந்தாய்வுகளுக்கு பெண்களுக்கு Video கட்டாயம் இல்லை. Audio வில் மட்டுமே இணைக்கப்படுவர்.

**20) தேர்வுகள் அரபியில் தான் எழுத வேண்டுமா?**

மாணவர்கள் அரபியில் எழுத தயாராகும் வரை அவர்களுக்கு அவகாசம் வழங்கும் பொருட்டு, முதல் இரண்டு ஆண்டுகளில் (தமிழ்/ஆங்கிலம்/உருது என) அவரவர் மொழியில் எழுதுலாம். மூன்றாம் ஆண்டு முதல் பெரும்பகுதி அரபியில் எழுதும் அளவில் மாணவர்களாகிய நீங்களே தயார் ஆகிவிடுவீர்கள். إن شاء الله

**21) முக்கிய நிகழ்வுகளுக்கு உதாரணமாக ஹஜ், உம்ரா, திருமணம், பேறுகாலத்தில், மருத்துவ விடுமுறைகள் உள்ளதா?**

ஆம்.

ஹஜ்ஜிற்கு 4 முதல் 6 வாரம் வரையும், உம்ராவிற்கு 2 முதல் 4 வாரங்கள் வரையும்,

திருமணத்திற்கு 2 முதல் 4 வாரங்கள் வரையும்,

பெண்கள் தங்களது Early Pregnancy நேரத்தில் 2 முதல் 4 வாரங்கள் வரையும், பிரசவ காலத்தில் 45-60 நாட்களும் எடுத்துக்கொள்ளலாம்.

மருத்துவ விடுப்பு அவர்களின் நோயின் தீவிரத்திற்கு ஏற்பவும் விடுப்புகள் வழங்கப்படும்.

**22) ஆண்டுக் கட்டணம் எப்போது செலுத்த வேண்டும்?**

ஆண்டுக்கட்டணம் அந்தக் கல்வியாண்டு தொடங்கும் முன்னர் கட்ட வேண்டும். அதன் தேதியை மதரஸாவில் அறிவிக்கப்படும்.

## கூடுதல் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

| | |
|---|---|
| S முஹையதீன் அப்துல் காதர், M.B.A.,<br>நிறுவனர் மற்றும் கண்காணிப்பாளர் , தாருல் உலூம் அல் அதரி | +91 89039 25087<br>ilm.alathari@gmail.com |
| மௌலவி ஹாபிழ் காரி K. உமர் பாரூக் நூரானி<br>Admin, தாருல் உலூம் அல் அதரி | +91 95782 72890 |
| மௌலவி ஹாபிழ் உமர் அன்வரி<br>Admin, தாருல் உலூம் அல் அதரி | +91 76676 63302 |